<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>

<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>

**OS.No: 22/2015** நாள் 12.06.2023.

வாசா.1, திரு.ஜவஹர்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி**

27.07.1928 தேதியிட்ட இராஜபாயைம் யூனியன் போர்டால் வழங்கப்பட்ட உரிமம் நகல். **வாசாஆ.4** ஆக பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. 1, 2 தபசில் சொத்துக்களில் திருவிழா நடத்தப்பட்டு வருவதற்கான அழைப்பிதழ் (8 எண்ணிக்கை) **வாசாஆ.5** வரிசை. 1, 2 தபசில் சொத்தில் திருவிழா நடந்ததை காட்டுவற்கான புகைப்படங்கள் (6 எண்ணிக்கை) நெகட்டிவ், குறுந்தகடு இல்லை என்ற பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணைக்கு உட்பட்டு **வாசாஆ.6** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது . பிராது 1 வது தபசில் சொத்தில் இருக்கும் கோவிலை சீர்திருத்தம் செய்து கட்டுவற்கான கட்டிட அனுமதி வரைபடம் நகல் . **வாசாஆ.7.** 14 ம் பிரதிவாதி வாதிக்கு வழங்கிய கட்டிட அனுமதி உத்தரவு அசல் **வாசாஆ.8.** 14 ம் பிரதிவாதிக்கு வாதி காலிமனை வரி செலுத்தியதற்கான ரசீதுகள் மற்றும் கேட்பு அறிவிப்புகள் ( 14 எண்ணிக்கை) **வாசாஆ.9** வரிசை. 13.11.1995 ல் 14 ம் பிரதிவாதி வாதி கோவிலுக்கு அனுப்பிய குறிப்பாணை அசல் . **வாசாஆ.10.** 23.11.2012 அன்று ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி 14 ம் பிரதிவாதியிடம் வாதி அளித்த மனு அலுவலக நகல். **வாசாஆ.11.** மேற்படி மனுவிற்கு 14 ம் பிரதிவாதி அனுப்பிய பதில் **வாசாஆ.12.** வாதி கோவிலில் முகப்பு கோபுரம் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளதாக 14 ம் பிரதிவாதி அனுப்பிய அறிவிப்பு **வாசாஆ.13.** மேற்படி அறிவிப்பிற்கு வாதி அனுப்பிய பதில் அலுவலக நகல் **வாசாஆ.14.** அந்த பதிலுக்கு மாவட்ட ஆட்சியர் அனுப்பிய பதில் **வாசாஆ.15.** 2 வது தபசில் சொத்தில் சாலை அமைக்கக்கூடாது என்று 14 ம் பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய மனு அலுவலக நகல் **வாசாஆ.16.** மேற்படி மனுவிற்கு 14 ம் பிரதிவாதி அனுப்பிய பதில் . **வாசாஆ.17.** 1 வது தபசில் சொத்தில் அமைந்துள்ள கோவிலை சீர்திருத்தம் செய்து கட்டுவதற்கு வழங்கிய கட்டிட வரைபடத்தின் அசல் வழங்குமாறு 14 ம் பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழான மனு அலுவலக நகல் **வாசாஆ.18.** மேற்படி மனுவிற்கு 14 ம் பிரதிவாதி அனுப்பிய பதில். **வாசாஆ.19.** பிராது 2 வது தபசில் சொத்தை தெரு என்று நகராளவை ஆவணங்களில் பதிவு செய்துள்ளதை நீக்கக்கோரி மாவட்ட வருவாய் அலுவலருக்கு வாதி கொடுத்த மனு அலுவலக நகல் **வாசாஆ.20.** மேற்படி மனுவில் வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பியதற்கான கடிதம் **வாசாஆ.21.** சிவகாசி உதவி ஆட்சியர் இராஜபாளையம் வட்டாட்சியருக்கு அனுப்பிய குறிப்பாணை **வாசாஆ.22.** 2 வது தபசில் சொத்து குடி நீர்குழாய் பதிக்கக்கூடாது என்று 14 ம் பிரதிவாதிக்கும், ஆட்சியருக்கும் வாதி அனுப்பிய அறிவிப்பு நாள் 05.08.2014 அலுவலக நகல். **வாசாஆ.23.** 2 வது தபசில் சொத்து குடி நீர்குழாய் பதிக்கக்கூடாது என்று 14 ம்

பிரதிவாதிக்கும், ஆட்சியருக்கும் வாதி அனுப்பிய அறிவிப்பு நாள் 06.08.2014 அலுவலக நகல். **வாசாஆ.24.** மேற்படி அறிவிப்புகளை 14ம் பிரதிவாதியும் மாவட்ட ஆட்சியரும் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகள். **வாசாஆ.25.** 2வது தபசில் சொத்து வழியாக மின் இணைப்பு வழங்க கூடாது என்றும் அவ்வாறு வழங்கப்பட்ட மின் இணைப்புகளை துண்டிக்குமாறும் 15ம் பிரதிவாதியின் அலுவலருக்கு வாதி அனுப்பிய அறிவிப்பு நாள் 21.02.2014 அலுவலக நகல். **வாசாஆ.26.** தகவல் அறியும் சட்டத்தின் கீழ் 15ம் பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய மனு **வாசாஆ.27.** மேற்படி மனுவிற்கு 15ம் பிரதிவாதி வழங்கிய பதில். **வாசாஆ.28.** அரசாணை G.O.(Ms) No.363 Date 09.04.2010 நகல் **வாசாஆ.29.** நீதிமன்ற ஆணையர் அறிக்கை **நீ.ம.சா.ஆ.1.** நீதிமன்ற ஆணையர் வரைபடம் **நீ.ம.சா.ஆ.2**. வழக்குரையில் கோரியவாறு பரிகாரம் வழங்கவேண்டுகிறேன்.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 12th day of June 2023.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.**

**(ஓம்/)திருமதி.கஜரா ஆர்.ஜிஜி)**
**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**
**திருவில்லிபுத்தூர்.**